සියලුම හිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

# முதலாந் தவணைப் பரீட்சை – மார்ச் 2017

தரம் 11

அக்கரைப்பற்று வலய அதிபர்கள் சங்கம்
அக்கரைப்பற்று

புள்ளி

சுட்டெண்: .........................

## தமிழ் இலக்கிய நயம் – I

நேரம் : 1.00 மணித்தியாலம்

- பகுதி - I இல் 1, 2 ஆகிய இரு வினாக்களுக்கும் பகுதி - II இல் 3ஆம் வினாவுக்கும் பகுதி - III இல் 4, 5, 6, 7 ஆகிய வினாக்களுள் இரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி - I

**01. சுருக்கமான விடை தருக.**

*i).* "ஆய்வளையாரோடும் மனையின் வாயில் வழியினை
மாற்றினால் நினையும் வீரன் அந்நீள் நெறி நோக்கலானான்"

அ) இக்கூற்று யாரால், யாருக்கு கூறப்பட்டது?

ஆ) இங்கு வீரன் எனக்குறிப்பிடப்படுபவன் யார்?

*ii).* "வான் உறு மதியம் வந்தது என்று எண்ணி மலர்க்கரம் குவியு
மென்று அஞ்சிப் போனது வண்டோ"

அ) இப்பாடல் வரிகள் இடம் பெறும் நூல் எது?

ஆ) இவ்வரிகளிலுள்ள அணி ஒன்றினைக் குறிப்பிட்டு விளக்குக.

*iii).* "தருகின்ற தருக்களின் தயவில் வாழ்ந்தாலும் மனிதன் கெட்டவனாகவே இருக்கின்றான்.

அ) இதனைக் கூறியவர் யார்?

ஆ) இத் தொடரின் மூலம் மனிதனின் எப்பண்பு கூறப்படுகின்றது?

*iv).* "கஞ்சி குடியென்றாள் களித்தின்று போவென்றேன்"

அ) இவ்வடியில் இடம்பெறும் ஊர்ப் பெயர் யாது?

ஆ) "களித்தின்று போ" எனும் சொற்றொடர் எவ்வாறு இரு பொருள்படுகின்றது?

*v).* "குஞ்சியாச்சி வாழ குஞ்சியப்பு வாழ"

அ) குஞ்சியாச்சி

ஆ) குஞ்சியப்பு

என்பவற்றுக்கு நிகராக தமிழில் வழங்கும் வேறு உறவுமுறைப் பெயர் ஒவ்வொன்று தருக.

(5 x 4 = 20 புள்ளிகள்)

**02. கீழே தரப்பட்டுள்ள பாடற் பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

தங்க வளைக்கைகள் தொட்டு சமைத்தது
சாலக் கமழுதையா - இதில்
அங்கமெலாம் மிகப் பொங்கி வழிந்திடும்
அன்பு கலந்த தையா



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

கொட்டிய உப்புக் கசப்பதென்றாலு முன்
கூடியயினிக்கு தையா - இது
விட்டுப் பிரிகையிற் சொட்டுக் கண்ணீர் பட்ட
விண்ணின் அமுதமையா.

சொன்னபடி நடவாத துடிப்பயல
தொட்டுச் சுவைத்த தையா - இது
சின்னஞ் சிறுகைக் குழந்தை யளைந்தது
தெய்வ அமுத மையா

ஆகக் கரிந்து பொரிந்த தென் றாலுமே
அன்பு மணக்கு தையா - இது
வேகவைக் காததென் றாலும் எனக்கொரு
விந்தை உருசியையா

ஊது குழற் சத்தம் கேட்டவ திப்பட்டு
ஓடி வருகை யிலே - இது
பாதி வழி வந்து தாமரைக் கைதந்த
பச்சை அமுதமையா

கிட்டிய அன்புக் கயிற்றினிற் சுற்றிய
கட்டுப் பொதியி தையா - இதைத்
தொட்டுச் சுவைக்கையில் உள்ளமெல் லாமொரு
சோதி மிளிரு தையா

அ) கணவன், மனைவிக்கு இடையிலான பரஸ்பர அன்பு இக்கவிதையில் எவ்வாறு புலப்படுகின்றது?
ஆ) குழந்தையின் மீது கொண்ட பாசம் வெளிப்படுத்தப்படும் விதம் குறித்து விபரிக்குக.
இ) இன்பகரமான குடும்ப வாழ்க்கைக்கு இன்றியமையாதென கவிஞர் எவற்றைக் கருதுகின்றார்?
ஈ) இக்கவிதையில் இடம்பெறும் அணிச்சிறப்பினை விளக்குக.
உ) 'விட்டுப் பிரிகையில் சொட்டுக் கண்ணீர்பட்ட விண்ணின் அமுதமையா' இவ்வடியில் காணத்தக்க இலக்கியச் சிறப்பை விளக்குக. (5 x 5 = 25 புள்ளிகள்)

## பகுதி - II

**03. பின்வரும் உரைப்பகுதியினை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

உரிமைக்கும் கடமைக்கும் இடையே உள்ள ஏற்றத்தாழ்வை நீக்குவதற்காக இயற்கை அமைத்த ஓர் அருமையான பாதுகாப்பே அன்பு எனப்படுவது. அன்பு எங்கே உயர்ந்து விளங்குகின்றதோ அங்கே உரிமைப் போராட்டம் இல்லை. கடமைக்குறைவு இல்லை. அதனால் "அன்பின் வழியது உயிர் நிலை" என்கிறார் திருவள்ளுவர். அன்பு இல்லாத வாழ்க்கை பாலை நிலத்திலுள்ள பட்ட மரம் போன்றது என்றும் கூறுகிறார். அதனால் குடும்பத்தில் அன்பு ஆட்சி செய்ய வேண்டும் என்று முன்னோர்கள் ஏற்படுத்தினார்கள். இல்வாழ்க்கையைச் சிறப்பித்து இல்லறம் என்றார்கள் மக்கட் பேறு, சுற்றம் நழுவுதல் முதலியவற்றை அதன் அங்கமாக்கினார்கள். தேச பக்தி என்று அமைந்த அன்பு அப்படியே நாடு என்ற பெரிய குடும்த்தைப் போற்றி வளர்ப்பதற்கு ஏற்பட்டதாகும். சமயம் அல்லது கடவுள் நெறி என்பதும் உலகத்தில் வாழும் எல்லோரிடமும் அன்பு செலுத்தி உலகத்தையே கடவுளின் குடும்பம் என்று கருதும் பரந்த நோக்கத்தை வளர்ப்பதற்கு ஏற்பட்டதாகும்.

www.agaram.lk

ஆனால் குடும்பத்தில் தாய் செலுத்தும் அன்பை தவறாகப் பயன்டுத்திக் கொண்டு தந்தையோ மக்களோ தன்னலம் உடையவர்களாய் தீமை செய்வார்களானால் என்ன ஆகும்? அப்படித் தான் நாட்டில் ஒரு சாராரின் அன்பைத் தவறாக பயன்படுத்திக் கொண்டு மற்றொரு சாரார் தன்னலமாக வாழ்வார்களானால் அன்பு வரண்டு போகும். உரிமைக்கும் கடமைக்கும் போராட்டம் ஏற்படும்.

அ) அன்பு பற்றிய ஆசிரியரின் நோக்கினை விளக்குக.

ஆ) அன்பின் அவசியத்தை வலியுறுத்த கையாளப்பட் உத்திகள் எவை?

இ) தேச பக்தியின் பயன் யாது?

ஈ) சமயநெறி ஏன் ஏற்பட்டதென ஆசிரியர் கருதுகின்றார்?

உ) ஒரு நாட்டில் உரிமைக்கும் கடமைக்கும் எப்போது போராட்டம் ஏற்படும்? (5 x 5 = 25 புள்ளிகள்)

## பகுதி - III

**எவையேனும் இரு வினாக்களுக்கு விடை எழுதுக.**

04 "கானல் வரி" என்ற பகுதியை அடிப்படையாகக் கொண்டு,

அ) நாட்டு வளம்

ஆ) சோழ மன்னனின் சிறப்பு என்பன எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகின்றது? விளக்குக. (15 புள்ளிகள்)

05. "புதுமைப் பெண்ணாய் மாறிடுவோம்" எனும் கவிதையிலே,

அ) தோட்டத் தொழிலாளிப் பெண்கள் அனுபவித்த துன்பங்கள்.

ஆ) அவர்களின் விடுதலை வேட்கை

என்பன வெளிப்படுமாற்றை விளக்குக. (15 புள்ளிகள்)

06. தெளிவு என்ற சிறுகதையிலிருந்து,

அ) கதைக் கரு, களம், தலைப்பின் பொருத்தப்பாடு என்பவற்றினை விளக்குக.

ஆ) குடும்ப வாழ்வின் இன்ப துன்பங்களை இக்கதையினூடாக ஆசிரியர் எவ்வாறு விபரிக்கின்றார்? (15 புள்ளிகள்)

07. திருக்குறள் நலம் புனைந்துரைத்தலில் தலைவியின் நலம் புனைந்துரைக்க.

அ) மலர்களையும்

ஆ) மதியையும்

கையாண்டிருப்பதிலுள்ள சிறப்புக்களை விளக்குக. (15 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk